தத்துவபோதினி.

பு. ௨.] சென்னைப்பட்டணம் ௧௮௬௫ வரு டிசம்பர் மீ ௭௨. [இல. ௮.

ஏகமேவாத்விதீயம், ஸத்யஞ்ஜ்ஞாநமநந்தம்ப்ரஹ்ம, ஶாந்திஸ்ஸ்ரீ ஸத்யம், தமேவ
யஜ்ஞத்ரயம் தஸ்ய ப்ரீதிஸ்தஸ்ய ப்ரியகார்ய ஸாதநஞ்ச தது பாஸநமேவ,
தமேவைகம் ஜாநத ஆத்மாநம்.

ஸத்யமேவஜயதே நாந்ருதம்.

அட்டவணை.

விஷயங்கள்.

	பக்கம்.		பக்கம்.
௧. கடவுள்துதி	௧௬௭	௫. உபநிஷத்து	௧௭௩
௨. விளம்பரங்கள்	௧௬௮	௬. அர்த்தசாஸ்திரம்	௧௭௪
௩. தத்துவபோதினி	௧௬௯	௭. நிருபங்கள்	௧௭௬
௪. பகவத்கீதை	௧௭௧	௮. விளம்பரம்	௧௨௪

சத்தியமே சக்தி—தத்துவமே சித்தி.

கடவுள்துதி.

துவஜாவந்திராகம் - ரூபகதாளம்.

பல்லவி.

தாபந்தணிப்பாயாக - ஓபிரமா - சாபந்தொலைப்பாயாக.

அநுபல்லவி.

பாவங்களனைத்தையும் - பற்றறவொடுக்கி
மேவும்பதமாகும் - முக்தியடைவதற்கு.......(தாப.)

சரணங்கள்.

௧. நிலந்தனில்வாழுகின்ற - நால்வகைமனிதரும்
நலஞ்செய்தேயுன்றனடி - நாட்வெனவமைத்தாய்;

பலவழிகளிலும்நான் - பண்பையடைவதல்லால்
அலங்ள்தவிர்ப்பதற்கும் - அறிவையடையவென்றன்...(தாபம்.)

உ. சிறப்பும்சிலமுந்தரும் - செயல்களின்னவையென்று
அறப்பொருளனைத்தையும் - அறியச்செய்தபிறகும்,
புறழாதுநன்மைகளைப் - புரிந்துகதியடைய
திறமையளித்தெனக்குத் - தீமைவிலக்கியென்றன்.... (தாபம்.)

ங. அருமைபொருந்திய - அறிவெனும்விளக்கமும்
முறங்காததிறமையாம் - விழியுந்தருவதல்லால்,
சுருங்காமுயற்சியும் - சோராதவிருப்பமும்
ஒருங்கவெனக்களித்து - ஓய்வென்றிக்காத்தென்றன்...(தாபம்.)

விளம்பரம்.

இந்தச் சென்னைத் தத்துவபோதினியை வாங்க மனமுடையவர்கள் மயிலாப்பூரில் தத்துவபோதினி அச்சுக்கூடத்தில் வேதஸமாஜத்தின் காரியதர்சியாகிய பி. சுப்பராயலு செட்டியார், பி. ஏ. பி. எல். அவர்களுக்கு எழுத்துமூலமாய்த் தெரிவித்துக்கொள்ளவேண்டியது.

இதற்குச் சந்தாவிவரம்.

சென்னைப்பட்டணத்தி லுள்ளவர்கள் வருஷம் ஒன்றுக்கு ரூபாய்........................க - அ - 0

அதற்கு வெளியிலுள்ளவர் தபால் கூலியுடன் சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய். உ - 0 - 0

பத்துப்பிரதிகளுக்கு அதிகமாய் வாங்கும் வெளியிலுள்ளவர்கள் தபால்கூலியுடன்சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய்.......................க - கஉ - 0

இதற்குச் சந்தாதார்கள்தங்கள்சந்தாக்களை யந்தந்த வருஷத்தில் முன்பணமாய்க் கட்டவேண்டியது. மேமாசத்துக்கு மேமாசம் இதற்கு வருஷமாய்க்கொள்ளவேண்டியது. வருஷம் நடுவில் வாங்கத் தொடங்குவோர் வருஷத்திய சந்தாவும் கொடுக்கவேண்டும்.

வெளியிலிருந்துசந்தா அனுப்பவேண்டியவர்கள் தபால் முத்திரைகளனுப்பலாம். ஆனல், அப்படி யனுப்பப்படும் முத்திரைகளை மாற்றுவதர்க்காக,ரூபாய் ஒன்றுக்கு- ஒரு அணு வீதம் வட்டம்சேர்த்து அனுப்பவேண்டியது,

இந்தப் பத்திரிகையின் சந்தாதாரர்களும், பங்குக்காரர்களும், இடம் மாறும்போது அந்தவிவரத்தைத் தயைசெய்து காரியதர்சிக்குத் தெரிவிக்கவேண்டியது.

புஸ்தகவிளம்பரம்.

கிரந்தத்திலும், தமிழிலும் இயற்றப்பட்டபாலவியாகரணம். 0 - ச - 0

வேதஸமாஜத்தார் முதல் விண்ணப்பம் விக்கிரஹ ஆராதன

த்தைக்குறித்தது நன்முய் ப
யிண்டுசெய்தது,..........0 - அ - 0

ஷ மட்டபயிண்டுள்ளது.....0 - எ - 0

கஅசுசஹு மேமாசம் முதல்
கஅசுடுஹு ஏப்பிரல்மீ வ
ரையிலுள்ள தத்துவபோதி
னி பயிண்டுசெய்தது...... ரு - 0 - 0

தமிழில்ஸ்தோத்திரபாடம்பிரதி 0 - க - 0

வெளியிலுள்ளவர்கள் புஸ்தகம் ஒன்றுக்கு ஒருஅணுவீதம் தபால்கூலி சேர்த்தனுப்பவேண்டியது.

நிருபக்காரருக்கு விளம்பரம்.

இந்தப்பத்திரிகையில் பிரசுரமாகும்படி தயைசெய்து நிருபமெழுதியனுப்பும் கனவான்கள், அதுபிரசுரமாக வேண்டியதற்கு முன்மாதமே, உ0உ க்குள்ளாக அந்த நிருபங்கள் எங்களிடம் சேரும்படி அனுப்புவார்களாகில் வெகு உபகாரமாக விருக்கும்.

எங்கள்கொள்கைகளை ஆக்ஷேபித்தெழுதினால் நாங்கள் பிரசுரம்செய்யமாட்டோமென்கிற கருத்தினாலே நிருபமெழுத மனமுடைய பலர் எழுதாமலிருப்பதாய் நாங்கள் கேள்விப்படுகிறோம். உண்மை. வெளியாகவேண்டியதே எங்கள்கருத்தாகையால், எங்கள் கக்ஷிகளை யாக்ஷேபித்தெழுதப்படும் நிருபங்களை நாங்களிதில் பிரசுரஞ்செய்வது மாத்திரமேயன்றி, பழுதானவையாய்த் தோன்றும் ஆக்ஷேபங்களுக்கு எங்களாலியந்தவரையில் சமாதானம் சொல்லவும் சரியான ஆக்ஷேபங்களை ஒத்துக்கொள்ளவும் சித்தமாயிருக்கிறோம்.

விஷயங்களின் மேலுள்ள குணதோஷங்களை யெவ்வளவெடுத்துச் சொன்னாலும் எங்களுக்குச் சம்மதமேயாகிலும், வியக்தி தூஷணங்களயடங்கிய நிருபங்களை இதில் பிரசுரப்படுத்த இயலாதாகையால் அதற்காக மன்னிக்கக்கோருகிறோம்.

கடைசியாக உண்மைவெளியாகி நன்மைபரவவேண்டுமென நாங்கள்முயலுகிறவாறே நிருபக்காரரும் பரிசுத்த சிந்தையுடன் தங்கள் கருத்துகளை வெளியிடுவார்களென்று நம்புகிறோம்.

தத்வபோதினி.

கடந்தபத்திரிகையில் ஆவசியகமானசங்கேதத்துக்கு விவாகத்தைத் திருஷ்டாந்தீகரித்துச்சிலபிரஸ்தாபம்செய்தோமல்லவா? இன்று பதார்த்த சுவத்துவாரம்பத்தைக குறித்து விசாரிககின்றோம். ஆதியில் கடவுள்உலகத்தைப்படைத்தபோது அவ்வுலகிலுள்ள பண்டங்க ளனைத்தையும் மனிதரனைவர்க்கும் பொதுவாய் அளித்தாரேயன்றி இன்னசொத்து இன்னாருதா யிருக்கவேண்டுமென்கிற நியமமேற்படுத்தவில்லை. தேசம் விஸ்தாரமாயும், பிரஜைகள் சுவல்பமாயும், அத்தேசத்தில் தாமாய்விளையும் பண்டங்கள் ஜனங்களை சம்ரக்ஷிக்க சமர்த்தமாயும் இருந்தவரையில், பூமியெல்லோர்க்கும் பொதுவாயிருந்ததென்றும், பிரஜைகளும் ஒருவர்க்கொருவர் போட்டியாவதுமனஸ்தாபமாவதில்லாமல் அவரவருக்கு ஆவசியகமானவரை பூமிபொதுவாயின்றபொருள்களைக் கைப்பற்றியுண்டு காலக்ஷேபம் செய்துவந்தனரென்றும் அர்த்தசாஸ்திரத்தின் அவதாரிகையால் வெளியாகி யிருக்குமல்லவா. பிறகு ஜனவிருத்திபாகுந்தோறும், இயற்கையான உண்பண்டங்கள் அவர்கள் சம்ரக்ஷணைக்குப் போதாதாகையால், 'ஆவசியகம் அறிவிற்குத்தாய்'என்னும் இங்கிலீஷ-பழமொழியின்படிமனிதர்காடுகளில் இயல்பாயும் சுவதந்திரமாயும் சஞ்சரித்துக் கொண்டிருக்கும் ஆடுமாடுகளினால் தங்கள் ஜீவனத்துக்

குள்ள ஸகாயத்தை மனதிற்கொண்டு அ
வற்றில் தங்களுக்காவசியகமானவும் தங்
களால் பரிக்கக்கூடியவும் வரையில் கை
ப்பற்றுவார்கள். இந்நிலைமையில் அவ
ருடைய ஆடுமாடுகளுக்குஉணவு கிடைக்
குமிடங்களுக்குமாறிமாறிச் சென்றுகொ
ண்டிருந்தமையால், மற்றபண்டங்களில்சு
வத்துவமேற் படாவிடினும், ஜனங்கள் ப
ரஸ்பரப்பிரயோஜனத்தை யுத்தேசித்து
அவரவர்சம்ரக்ஷணைக்குட்பட்ட மந்தை
கள் அவரவருக்குச்சொந்தமாயிருக்கவே
ண்டியதென்று சங்கேதம்செய்து கொள்
வார். ஆகிலும் அந்தசங்கேதத்தைக்கடந்
து நடப்பவரை சிக்ஷிக்கத்தகுந்த அதிகா
ரிகளில்லாமையாலும், மனிதருள் எப்
போதும் சோம்பேறிகள் சிலரும், முய
ற்சியுள்ளோர் சிலரும், பலவான்கள் சில
ரும், பலஹீனர் சிலருமாக விருப்பார்ளா
கையாலும், பலமேபாத்தியமென்கிற நிய
மத்தை மனதிற்கொண்டு, சோம்பேறிக
ள் பரிசிரமப்படுவோரை யெதிர்த்துப்
போராடி வென்று அவர்கைப்பொருளெ
ல்லாம் பறித்துக்கொள்வார்கள். இவ்வா
று சுவத்துவமென்பதேற்பட்டபோதிலு
ம், அது நிலையாமல் நொடிதோறும் சலி
த்துக்கொண்டே வெகுகாலம் கழிந்தமே
ல், ஜனங்கள் விசேஷமாய் விருத்தியாகி,
அவர்கள் ஜீவனத்துக்கு பூமியின்இயல்
பான விளைவும், ஆடுமாடுகளும் போதா
மற்போகும்போது, இவர்கள்பயிர்த்தொ
ழிலை யறிந்துகொண்டு நிலைத்தகுடிகளா
வார்கள். அப்போது வீடுவாசல், மாடு
கன்று, நிலம் நீர், முதலிய பலபொருள்
கள் அவரவருக்கு உரித்தாயேற்படு கின்
றமையால் அவற்றின் சம்ரக்ஷணார்த்தம்
நியமங்களேற்படுத்திக் கொள்வது ஆவ
சியமாகும். இயற்கையில் அனைவரும்சுவ
தந்திரத்துக்காசைப்படும்வரையில், ஒரு
வர்க்கும் அவரவருடைய கஷ்டார்ஜிதங்
களிலொன்றும் நிலைக்கமாட்டாதாகையா
ல், மற்றசவுக்கியங்கள் நிலைக்கும் நிமித்
தம் சுவல்பசுவாதந்திரியத்தை யிழக்க அ
வர்சஹஜமாயொப்புக் கொள்வார். பிற
கு யாராவதொருவன் அந்தநியமங்களைக்
கடந்து நடப்பாருகில், மற்றவர்கள் பொ
துக்ஷேமத்தை யுத்தேசித்து அவன்மீது
துவஜமெடுத்து அவனை சிக்ஷிப்பார்கள்.
இதுதான் ராஜாங்கத்துக்கு ஆரம்பமாகு
ம். ஒவ்வொரு குற்றத்துக்கும் ஜனங்க
ளெல்லாம்கூடிசிக்ஷித்துமுடி ப்பாராகை
யால், அவர்களெல்லாம்கூடி அனைவர்க்
கும் பொதுவாக அரசனென்றொருவனை
யேற்படுத்துவார்கள். பிறகு கிரமக்கிர
மமாய் அரசியல் நியமங்களெல்லாம் சீர
டையும். இவ்வளவுடனிருப்பின்சுவத்து
வமுண்டாகியும் விசேஷபயனிராது. ஆ
கையால் வெகுகால அனுபவத்தின்மேல்
தாயக்கிரமங்களும்,சொத்தைப்பிறருக்கு
வினியோகஞ்செய்ய அதிகாரமும்உண்டா
வதுமன்றி, சிலநியத மானகாலம் ஒருவ
ன் ஒருசொத்தைக்கிரமமாயாவது அக்கிர
மமாயாவது, சுவத்துவம்பாராட்டியனுப
வித்துவிட்டால் பிறகு அதையாக்ஷேபிக்
க்கூடாதென்கிற நியமமும் ஏற்படுகிறது.
ஆவசியகமானசங்கேதங்களைக்குறித்துஇ
துவரை யுரைத்த திருஷ்டாந்தங்க ளே
போதுமென்று தோன்றுகிறபடியால் இ
தை இவ்வளவுடன் முடித்துமற்றசங்கே
தங்களைக்குறித்து வருகிறபத்திரிகையில்
விசாரிக்க நிச்சயித்திருக்கிறோம்.

தத்துவகாமி யென்பவர் எழுதிய நிரு
பத்தைக்குறித்து எங்களபிப்பிராயத்தை
இன்றுவெளியிட அவகாசமில்லை யாகை
யால், அதைக்குறித்து வருகிறபத்திரிகை
யில் பிரஸ்தாபிப்போம்.

புருஷஸூக்தம்.

புருஷன் முடியாயிரம், கண்ணாயிரம்,
காலாயிரமுடையவன். அவன் பூமியெங்
கும்வியாபித்துப் பத்தங்குலம்கடந்தான்.
கடந்ததும்,நிகழ்வதும்,வருவதுமாகிய ச
கலமும் புருஷனே; அன்றியும் அன்னத்
தினலடையத்தக்க அமிருதத் துவத்துக்
கும் இறைவன். அவன்மகிமையை இத்த
ன்மையது. இதிலும் சிறப்புடையவன்பு
ருஷன். சகலபூதங்களும் அவனில் ஒரு
பாதம். அழிவற்ற மற்ற மூன்றுபாதம் தி
வியிலிருக்கின்றன. புருஷன் மூன்றுபா
தங்களை மேலேவியாபிக்கச்செய்தான். ம

றுபடி யொருபாதமிவ்விடத் திலுண்டாயிற்று. பின்பு அன்னத்தோடுகூடியும் கூடாமலுமுள்ளவற்றிலெல்லாம் அவன்வியாபித்தான். அவனிடத்தி னின்றும் விராட்டுண்டாயிற்று. (அவன்) விராட்டுக்கு அதிபுருஷன். அதுபிறந்துபூமியைமுன்னும்பின்னும்கடந்தது. புருஷனைக்கொண்டு தேவர்கள் யக்கியம் செய்தபோது, அதற்கு (அந்தயக்கியத்துக்கு) வசந்தருது நெய்யாயிற்று; கிரீஷ்மருது(விறகு)ஆயிற்று; சரத்ருது ஹவிஸு(சோறு) ஆயிற்று. அதற்கு இருபத்தோரு சமித்துக்களால் செய்யப்பட்ட ஏழுபரிதிகள் (எல்லைகள்) தேவதைகள் யக்கியம்செய்பவராக புருஷனாகிய பசுவைக் கட்டினபோது, அப்படி முதற்பிறந்த யக்கியமாகிய புருஷனை பிரோக்ஷித்தார்கள். அதனைக்கொண்டு தேவரும், சாத்தியரும், ருஷிகளும் யாகம் செயதார்கள். எல்லோராலும்கொண்டாடத்தக்க அந்தயக்கியத்தினின்றும் மோர்கலந்த நெய்யெடுக்கப்பட்டது. அதைக்கொண்டு, வாயுசம்மந்தமானவும்,காட்டிலுள்ளவும்,ஊர்களிலுள்ளவும் பசுக்களையுண்டாக்கினார்கள்.அனைவராலும்கொண்டாடத்தக்க அந்தயக்கியத்தினின்றும் ருக்குவேதமும் ஸாமவேதமும் உண்டாயின; அதினின்றும் சந்தஸுகளுண்டாயின ; அதினின்றும் யஜுஸ்உண்டாயிற்று; அதினின்றும் குதிரைகளு ண்டாயின ; அதினின்றும் இரண்டுவரிசைப் பற்களையுடைய ஜந்துக்களுண்டாயின. எந்த புருஷனை நிறுத்தினார்களோ அவனை யெத்தனைவிதமாக விகல்பித்தார்கள்? அவனுக்கு முகமெது? கைகளெவை? எவை துடைகளும் பாதங்களுமென்னப் படுகின்றன? அவனுக்கு பிராம்மணன்முகமானான்; க்ஷத்திரியன் தோள்களாக்கப் பட்டான்; வைசியனெதுவோ அது துடைகளாக்கப்பட்டன; பாதங்களினின்றும் சூத்திரனுண்டானான் ; மனதினின்றும் சந்திரனுண்டானான்; கண்களினின்றும் சூரியனுண்டானான் ; முகத்தினின்றும் இந்திரனும் அக்கினியும்; பிராணத் தினின்றும் வாயுவுண்டாயிற்று; நாபியினின்றும் அந்தரிக்ஷமிருந்தது; தலையில்சுவர்க்கமிருநதது; பாதங்களினின்றும்பூமியும்; காதினின்றும் திக்குகளும், இப்படி உலகங்களைக்கல்பித்தார்கள். எந்தபுருஷன் சகலரூபங்களையும் விசேஷமாயுண்டாக்கி, பெயர்களையும்ஈந்து, அப்பெயர்களில் வியவஹரித்துக் கொணடிருக்கிறானோ, அப்படிப் பட்ட மஹானாகியவும், சூரியனைப்போல் ஜுவலிக்கிறவும் அக்கியானத்துக்குப் புறம்பாயுள்ளவும் அந்தபுருஷனை நான்தியானமார்க்கத்தாலறிவேன். பூர்வம்பிரஜாபதியும் நாலுதிக்குகளிலுமுள்ளவற்றைநன்றாயறிந்த இந்திரனும் (உபதேசித்த விதமாக)அவரை (பிரும்மத்தை)தியானமார்க்கத்தாலறிந்தவன் இவ்விடத்திலே அமிருதனாகிறான். பரமபதப்பிராப்திக்கு வேறுவழியில்லை. தேவர்கள் யக்கியத்தால் யக்கியம் செய்தனர். அந்ததர்மங்கள் முதன்மையாயின. எவ்விடத்தில் புராதனமானதேவர்கள் சாத்தியராயிருக் கின்றனரோ அப்படிப்பட்ட சுவர்க்கத்தை மஹிமையுடைய அவர்களடைந்தனர்.

பகவத்கீதை

கச வது - அத்தியாயம்.

கிருஷ்ணன்சொல்.

க. எந்தக்கியானத்தை யறிந்து எல்லா ருஷிகளும் இதைக்காட்டிலும் மேலானகதி அடைந்தனரோ அந்தக்கியானங்களுள் மிகவும் உத்கிருஷ்டமான கியானத்தை மீண்டும் சொல்லுகிறேன.

உ. இந்தக் கியானத்தை யடைந்து என்னுடைய ஸ்வரூபத்தை யண்டினவர்களாய் ஸ்ரிஷ்டிகாலத்திலும் பிறக்கமாட்டார். பிரளயகாலத்திலும் வியதிக்கப்படமாட்டார்.

ங. ஓ அர்ஜுனா! மஹத்தானஎன்னுடைய (பிரமாவென்கிற பரியாய நாமத்தை யுடைய`மூலப் பிரகிருதி (பூதசிருஷ்டியின் பொருட்டு காரணமாகிய) ஸ்தானமாகின்றது. அந்தப்பிரகிருதியினிடத்து நான்காப்பதைக் கொடுக்கிறேன் (என்றால் சிருஷ்டிக்கு மூலகாரணமாகிய வித்தையளிக்கின்றனன்)அதனால் சமஸ்தப்பிராணிகளும் உண்டாகினறன.

ச. சர்வயோனிகளிலும் எந்த ரூபங்கள் ஜனிக்கின்றனவோ அந்த தேகங்களைத் தாங்கும் சிரேஷ்டமான(உத்பத்திஸ்தானமாகி

ய)மாதாவும்நானே, பீஜப்பிரதாயகனாகிய பிதாவும் நானே.

ரு. ஓ பகவானே! பிரகிருதியினால் உண்டான சத்வரஜஸ்தமங்களாகிய திரிகுணங்களும் நாசரஹிதனான க்ஷேத்திரக்கியனை க்ஷேத்திரத்தோடு சம்பதிக்கச் செய்கின்றது.

சு. ஓய் பாபர்ஹிதனே! அக்குணங்களுக்குள், பரிசுத்தத்தினால் பிரகாசிக்கின்ற சத்வகுணமானது சுகசங்கமத்தினாலும் கியானசங்கமத்தினாலும் ஆத்மாவை ஏவுகின்றது (என்றால் தேஹியாயிருக்கும் ஆத்மாவினிடத்து சுகமும் கியானமும் ஜனிப்பது சத்வகுணசம்பந்தத்தினால்.)

எ. ஓய் குந்திபுத்திரா, ஆசையாலும், பந்தத்தாலுமுண்டாகிற ரஜோகுணம் ராகத்தின் தன்மையையுடையது. அந்த ரஜோகுணம் ஆத்மாவை கர்மாஸக்தியினால் கட்டுகின்றது. (என்றால் ரஜோகுணமானது சகலபாசங்களுக்கும் காரணமாகிறது.)

அ. ஓ பாரதனே? சமஸ்தப்பிராணிகளுக்கும் மோக்ஷகரமான தமோகுணமோவென்றால், அக்கியானத்தால் பிறந்ததாகவறிவாய். அது, பிரமாதத்தையும், ஆலசியத்தையும் நித்திரையையும் உண்டாக்கின்றது.

கூ. ஓ அர்ஜுனா? சத்வகுணம் (ஆத்மாவை)சுகத்தோடு கூட்டுகின்றது, ரஜோகுணம் கர்மத்தோடு கூட்டுகின்றது. தமோகுணம் ஞானத்தை மூடிமறைத்தியோடுசேர்க்கின்றது ஆச்சரியம்!.

க0. ஓ பரதவம்சத்தில் பிறந்தவனே! ரஜோகுணத்தையும் தமோகுணத்தையும் திரஸ்கரிப்பதினால் ஸத்துவகுணமுண்டாகின்றது. ரஜஸ்தவங்களை திரஸ்கரிப்பதினால் தமோகுணமுண்டாகின்றது. அவ்வாறே தமஸ்தவங்களை திரஸ்சரிப்பதினால்ரஜோகுணமுண்டாகின்றது. (என்றால் எல்லாப்பிராணிகளிலும் இந்த மூன்றுகுணங்கள்எப்போதுமுண்டு. ஆனால் ஒவ்வொன்றிலுமிரண்டுமடங்கு மற்றொன்று மேலிட்டிருக்கும்.)

கக. ஓ குந்திநந்தனா? இந்த தேகத்தில் செவிமுதலிய சகலதுவாரங்களிலும், எப்பொழுது கியான சுவரூபத்தையுடைய பிரகாசம் உண்டாகின்றதோ அப்பொழுது சத்வகுணம் விருத்தியடைந்ததென்று அறியக்கடவது.

க௨. ஓ பரதசிரேஷ்டனே? ரஜோகுணம் விருத்தியடைய, பொருளாசையும், விஷய வியாபாரமும், கர்மப்பிராரம்பமும், ஸமயின்மையும், இச்சையும், முதலிய இக்குறைகள் உண்டாகின்றன.

கந. ஓ குருநந்தனா? அவிவேகமும், அசிரத்தையும், பிரமாதமும், மோகமும், இக்குறிகள் தமோகுணம் விருத்தியடை கையில் உண்டாகின்றன.

க௪. சரீரியாகிய ஆத்மா ஸத்குணம் விருத்தியடைந்துக்கொண்டிருக்கையில் எப்பொழுது தேகவியோக மடைகின்றானோ அப்பொழுது நிர்மலமான உத்தமபிரமவேத்துக்களுடைய லோகத்தையடைகின்றான். (என்றால் சத்துவகுணம் மேலிட்டிருக் கையில் மரணமடைபவன் பரமோபாசிகளாகிய உத்தமர்குலத்தில் ஜன்மிக்கின்றான்.)

கரு. ரஜோகுணம் மேலிட்டிருக் கையில் மரணமடைகிறவன் கர்மத்தால்பந்தப்பட்டிருக்கிற துவிஜர்குலத்தில் உத்பவிக் கின்றான். தமோகுணம் மேலிட்டிருக்கயில் இறப்பவன் (அர்ச்சாராதி மூடமதங்களை யவலம்பிக்கும்) சூத்திரயோனியில் ஜனிக் கின்றனர்.

கசு. சத்வகுணத்தால் ஜனிக்கும்கர்மத்துக்கு சாத்விகமானவும் நிர்மலமானவும் பலத்தைபெரியோர் சொல்லி யிருக்கின்றனர். ரஜோகுண கர்மத்துக்கு பலம் துக்கமாகவும், தமோகுணத்துக்குபலம் அக்கியானமாகவும் பெரியோர் சொல்லுவார்கள்.

கஎ. சத்வகுணத்தினால் கியானமும், ரஜோகுணத்தால் பிரமாத மோகங்களும், அக்கியானமும் உண்டாகின்றன.

கஅ. சாத்விகாள் ஊர்த்துவ முகமாகச் செல்லுகின்றனர். (என்றால் தேவாதிகளைச் சேருகின்றனர்.) ரஜோகுண விருத்தியுடையவர்கள் மத்தியில் தானேயிருக் கின்றனர். (என்றால் மனுஷியலோகத்தில் தானே வர்த்திக்கின்றனர்.) நிகிருஷ்டகுணவிருத் தியிலிருக்கும் தமோகுண முடையவர்கள் அதோமுகமாகச் செல்லுகின்றனர். (என்றால் நரகலோகத்தை யடைகின்றனர்.)

ககூ. எப்பொழுதும், அறிந்தவன், விஷயங்களைப் பார்க்கிலும், அந்நியமானது கர்த்தாவாகப் பார்க்கமாட்டானோ, மேலும்,குணங்களுக்கும் பரமான (குணவியாபாரசாக்ஷிபூதனாகிய பிரம்மத்தை)அறிந்தவன் என் ஸ்வரூபத்தை அடைகிறான்.

௨0. சரீரத்தையுடையவன் (என்றால்ஆத்மா) சரீரத்தாலுண்டாகும் மூன்றாகிய இந்தகுணங்களை அதிக்கிரமித்து இறப்புப் பிற

ப்பு நரைமுதலியதுக்கங்களை விட்டவனாகி மோக்ஷத்தை யடைகின்றான்.

அர்ஜுனன்சொல்.

௨௧. ஓய்ஸ்வாமி! எந்தச் சின்னங்களால் மூன்றாகிய குணங்களை அதிக் கிரமித்தவனாகின்றான்? அவன் எவ்வித ஆசாரமுடையவன்? எவ்வாறு மூன்றுகுணங்களையும் அதிக்கிரமிக்கின்றான்?

கிருஷ்ணன்சொல்.

௨௨. ஓய் பாண்டவனே! திருகுணா தீதனானவன், சம்பிராப்தமான சத்வகுணகாரியங்களையும் தமோகுணகாரியங்களையும் துவேஷிக்கமாட்டான். பிரவர்த்தியையாவது, நிவர்த்தியையாவது கோறுகிறதில்லை.

௨௩. எவன் பக்ஷபாத மில்லாதவனைப் போன்ற குணங்களால்சலிக்கப்படமாட்டானோ, குணங்கள் தாம்வர்த்திக்கின்றன வென்று நிச்சலனாயிருப்பானோ,

௨௪. சுகதுக்கங்களில் சமமானவனும், தன்னுள்ளடங்கியவனும், பொன்னையும், மண்ணையுங்கல்லையும் சமமாகக் கருதுகின்றவனும், பிரீதியிலும்அப்பிரீதியிலும் சமமானவனும்தைரியமுள்ளவனும் நிந்தையிலும் ஸ்துதியிலும் சமமானவனும் எவனோ,

௨௫. மானாவமானங்களில் சமத்வமுடையவனும், சத்துருக்களுக்கும் மிததுருக்களுக்கும் சமமாயிருப்பவனும், சகலசங்கல்பகருமங்களையும் பரித்திய ஜித்தவனும்எவனோ அவன்குணாதீதனென்றுசொல்லப்படுகிறான.

௨௬. எவன் என்னைநிச்சலமான பக்தியோடு சேவிக்கிறானோ அவன்இந்தக்குணங்களை அதிக்கிரமித்து பிரம்மஸ்வரூபத்தின் பொருட்டு சமர்த்தனாகிறான். (என்றால் எவன் பிரம்மமாகிய என்னைஜயித்து மோக்ஷமடைகிறான். மோக்ஷத்துக்குப்பிரம்மோபாசனையின்றி வேறுவழியில்லை.)

௨௭. ஏனெனில்பரமாத்மாவுக்குப்பிரதிபிம்பம் நானே. அழிவற்ற மோக்ஷத்துக்கும் ஆஸ்ரயம்நானே,நித்தியமானதர்மத்துக்கும் ஆஸ்ரயம் நானே, முக்கியமான சுகத்துக்கும் ஆஸ்ரயம்நானே ஆகின்றேன்.

அதர்வணவேதத்தைச்சேர்ந்த மாண்டுக்கியஉபநிஷத்து.

ஓமென்னும்அக்ஷரமேஇதெல்லாம். கடந்ததும், நிகழ்வதும் வருவதும்அதின்பொருளே. சகலமும்ஓங்காரமே. முக்காலங்களைக்கடந்ததும்ஓங்காரமே. ஏனெனில்இதெல்லாம்பிரும்மமல்லவா. அதுநான்கு பாதங்களையுடைய ஆத்மாவாகும். விழித்தநிலைமையும், வெளியறிவும், ஏழுருபும், பத்தொன்பதுமுகமும், ஸ்தூலபுசிப்பும் உடையவைசுவானரன் முதல்பாதமாம். சுவப்பனாவஸ்தையில், உள்ளறிவும், ஏழுருபும், சூக்ஷமப்புசிப்புமுடையதைஜஸன் இரண்டாம்பதமாம். உறக்கத்தில்விருப்பமற்று கனவுமின்றியுள்ள (நிலைமைக்கு) சுழுத்தியென்றுபெயர். சுழுத்தி நிலைமையில், ஒன்றாய், பிரக்கியானனாய், ஆநந்தமயனாய், இன்பம்புசிப்போனாய், ஞானமுகனாய், உள்ளபிராக்கியன் மூன்றாம்பாதமாம். இவன் சர்வேசன்; இவன்சர்வகக்கியன்; இவன் அந்தரியாமி;இவன் அனைத்திற்கும்காரணம், பூதங்களின் உற்பத்தியும், அழிவும், இவனிடத்தினவே. உள்ளறிவின்றியும், வெளியறிவின்றியும், இருவகையறிவுமின்றியும், பிரக்கியையின்றியும், அப்பிரக்கியையின்றியும், பிரக்கியான கனமின்றியும், கண்ணிற்குப்புலப்படாமலும், வழங்கக்கூடாமலும், பற்றக்கூடாமலும், நினைக்கக் கூடாமலும், இலக்கணமற்றும், தன்மையின் சாரமே காக்ஷியாயுடைத்தாகியும், பிரபஞ்சோப சமானமாயும், சாந்தமாயும், மங்களமாயும், உள்ள அத்துவைதத்தை நான்காம்பாதமாய் மதிக்கின்றனர். அவர்தான் ஆத்மா, அவரேஅறியவேண்டியவர். இந்தஆத்மா ஓங்காரத்தை அத்தியக்ஷாமாயுடையது. அதின்மாத்திரைகளையும்உடையது. பாதங்களே மாத்திரைகள்;மாத்திரைகளேபாதங்கள்.அவை அகார, உகார மகாரங்களாம். முதன்மையாலும்,வியாபித்திருப்பதினாலும், முதல்மாத்திரையாகிய அகாரமேவிழிநிலைமையுடையவைசுவானரன். இதையறிந்தவன் சகலவிருப்பங்களையுமடைந்து முதல்வனாகிறான். உயர்வினாலும்,இரண்டாவதா யிருத்தலாலும், இரண்டாவதுமாத்திரையாகிய உகாரமே சுவப்பனஸ்தானமாகியதைஜஸன். இதையறிந்தவன் ஞானத்தொடர்சியை வளர்க்கிறான்; சமானனுமாகிறான். அவன் குலத்தில் பிரும்மத்தை யறியாதவனுமில்லை. அளவினாலும் வியாபிப்பதினாலும் மூன்றாம்மாத்திரையாகிய மகாரமே சுழுத்தி நிலையுடைய பிராக்கியன். இதையறிந்தவன் சகலத்தையும் அளந்து ஒருபுறமிருக்கிறான். மாத்திரையின்றி, வழங்கக்கூடாமல், பிரபஞ்சோபசமானமாய், மங்களமாய் அத்துவைதமாயுள்ள நான்காம்பாதமாகிய ஓங்காரம் ஆத்மாவே. இதையறிந்தவன்மனதினால் ஆத்மாவிற் செல்லுகிறான்.

அர்த்தசாஸ்திரம்.

சம்பளங்களைப்பற்றியும், ஜனசங்கியையைப்பற்றியும்.

(தொடர்ச்சி.)

இவ்வாறு க்ஷாமத்தினால் நேரிடத்தக்கதுன்பங்களுக்குப் பரிகாரம்பண்டகளின் விலையுயர்வேயாம். அதினாலே குறைவா யுள்ள பண்டங்களைமிதமாகச்சிலவழிப்பதற்கும் திரும்பி பழயபண்டங்கள் உற்பத்தியாகும் பரியந்தம் நீடித்து வருவதற்கும் இடமுடண்டாகி அன்னியதேசங்களி னின்றும்தான்னியத்தை இறக்கும்திசெய்ய வர்த்தகர்களுக்கு மனமுண்டாகச்செய் வதினால்க்ஷாமத்தினுடைய குரூரத்தை மிகவும் தாழத்துகின்றது. ஆனால்இராஜாங்கத்தார் பண்டங்களின் விலையையாவது சம்பளங்களின் கிரமங்களையாவதுமாற்றப்பிரவர்த்திக்கக்கூடாது. அவைத் தமக்குத்தாமேஅயலார் முயற்சியின்றிசரியான ஸதிதிக்குவந்துவிடும்.

இதுநிற்க நாம் முன்பிரஸ்தாபித்துவிட்டப்புதிதாய்க் குடியேறியவர்களுடைய விர்த்தாந்தத்தைத்தொடர்ந்துகொள்வோம்.அவர்கள் வசிக்குமிடத்தில் சிலதொத்து வியாதிகளுண்டாகுமாயின், அதினால் வேலைக்காரருடைய சம்பளங்கள் எந்நிலைமையிலிருக்குமோவதைச்சற்று கவனிப்போம். வியாதியினால் ஜனநஷ்டமுண்டாகுங் காரணத்தைப்பற்றி முதலில்வேலைக்காரருக்கு கிராக்கியதிகரிக்க அவர்கள் சம்பளங்களும் அதிகரிக்கும். ஆகையால் வேலைக்காரர்சங்கியைமாறுதிருந்தால் அவர்கள்சம்பளங்களும்,முதல்விர்த்தியாகஅதிகரிக்குமென்றும், அதுகுறைய, குறையுமென்றும், முதல் மாறுதிருந்தால் சம்பளங்கள் வேலைக்காரர் சங்கியை அதிகரிக்க குறையுமென்றும், அவர்கள் சங்கியைகுறைய உயருமென்றும் கொள்ளலாம். இதைச்சுருக்கமாய்ச் சொல்லவேண்டி யிருந்தால் முதல்பெருகுவது சம்பளங்க ளுக்கு அனுகூலமாயும் வேலைக்காரர் சங்கியைஉயர்வதுப் பிரதிகூலமாயுங்கொள்ள வேண்டுமென்று கூறலாம்.

மாக்பெர்ஸன்என்பவர்எழுதியிருப்பதாவது“ இங்கிலாண்டுதேசத்தில் -க௲சஅ-௵த்தில் கீழண்டைதேசங்களினின்று பரவிய ஒருகோரமானதொத்து வியாதியானது உண்டாய் ஏழை ஜனங்களி லநேகரைக்கொண்டுபோய்விட்டது. இது னின்றும் தப்பிப்பிழைத்த கனவேலைக் காரர்கள் தங்களுக்குண்டாயிருக்கும் கிராக்கியையறிந்து அதிகச்சம்பளங்கேட்கத் தலைப்பட்டார்கள். அப்போதுஅரசனாயிருந்த மூன்றும் எட்வர்ட்டு என்பவன் ஊழியக்காரர்சட்டமென் றொருசட்டத்தை யேற்படுத்தி கூ0 வயதுக்குட்பட்ட ஸ்திரீகள் புருஷர்கள் யாவரும் (அடிமையானாலும்சரி, சுவயேச்சையாயிருந்தாலும்சரி)வேலையாவது சொத்தாவது ஒன்று மிராமலிருந்தால்யார்அவர்களைவேலைக்கழைக்கிறார்களோ அவர்க ளிடம்சென்று உழைப்பதுமன்றி க௲சகூ-வது வருஷம் அல்லது அதற்கு முந்திய ச-டு-வருஷங்களில் கொடுபட்டு வந்த சம்பளங்களைப் பெற்று வரவேண்டுமென்றும் அப்படிபெற்றுக் கொள்ளாவிட்டால் அவர்கள் காவலில் வைக்கப்படுவார்க ளென்றும் அதற்குமிஞ்சிசம்பளம் கொடுப்போர்களும் தண்டனைக்குட்படுவார்களென்றும் விதித்தான். கசாப்பு க்காரர்கள் ரொட்டிபண்ணுபவர்கள் சாராயம் செய்பவர்கள் முதலிய யாவரும் நியாயமான விலைகளுக்கே தங்கள்பண்டங்களை விற்று வரவேண்டுமென்றும், உத்திரவுசெய்யப்பட்டது. வேலைக்காரர்கள் இந்தசச்சட்டத்தைஅலட்சியம் பண்ணமல் அதிகச்சம்பளம் கொடுத்தாலொழியவேலைசெய்கிறதில்லையென்றார்கள். அப்போது பார்லிமெண்டு சபையார் வேறொருசட்டத்தை யேர்படுத்தி வரூஷ்ம்-க-க்கும்நாள் க-க்கும்பயிர்தொழிலாளிகள்வேலைக்காரர்கள்வாங்கவேண்டிய சம்பளங்களையும் செருப்புவிலைகளையுங்கூட நிஷ்கரிஷைசெய்தார்கள். மெலும்மழைகாலத்தில் பட்டணத்தில் வசித்தயாவரும் கோடைகாலத்தில் அதைவிட்டு, போகக்கூடாதென்றும், ஒருஷயர் அல்லது ஜில்லாவிலிருந்து மற்றொன்றுக்குப் போகக்கூடாதென்றும் விதித்தார்கள். இவ்வாறுஅற்பஜனங்கள்சட்டங்களால்நிற்பந்திக்கப்பட்டு தங்களுடையஸ்திதியைசீற்படுத்திக்கொள்வதற்கு அசக்தாளாயிருந்தார்கள்.

ஆகையால்வேலைக்காரருக்குக் கிடைக்கத்தகுந்த உணவுகுறையுமாயின் அவர்களுக்கு கிராக்கியுயருமென்பது தானாய்விளங்கும்.

ஒரு பாரிவேலைசெய்து முடிக்கவேண்டியிருந்தால் வேலைக்காரருக்கு கிராக்கி உயருவது சகஜம். ஆனால் ஒருவன் ஒருமிகவும்பெரியவேலையைச்செய்து முடிக்கக் கோருவானாகில்அவன்கையிலிருக்கும்முதலுக்குத் தக்கபடியவனுடையஇஷ்டத்தைநிறைவேற்றசக்தியுள்ளவனாவான். அதாவது எவ்வளவுவேலைக்காரருக்குக்கூலிக் கொடுத்துக் காப்பாற்றஅவன்கையிற்பொருளிருக்குமோ அதற்குத்தக்கபடி யென்றுகொள்ளவேண்டியது.

இவ்வாறே ஒவ்வொரு மனிதனுடைய முதலு
ஞ் சேர்ந்திருக்கிற ஒருதேசத்தின் முதலும்
எத்தனைப்பேரைக்காப்பாற்றக் கூடுமோ அத
ற்குத்தக்கபடியே யதற்குச்செய்யக் கூடுமா
ன வேலையுமிருக்கும். ஒருதேசத்தில் உழுது
பயிரிடத்தக்க வெல்லாக்கரம் புநிலங்களும்
செய்யத்தக்கவேலையென்று எண்ணலாம். ஆ
னால் அவ்வேலையைமுடிக்க வேலைக்காரர்மா
த்திரமேயன்றி அவர்களைக்காப்பாற்றத்தக்க
ப்போதுமான உணவும்வேண்டும். நாம்முதலை
ப்பற்றிப் பேசும்போது விசேஷமுதலுள்ள
தேசங்களில்பெரியகட்டடங்கள்வாராவதிக
ள் இருப்புப்பாதைகள் முதலிய பெரியவே
லைகளை நடத்தப்படுமென்று கூறியிருந்தோ
மல்லவா. இவையெல்லாம் பெருஞ்செல்வ
த்துக்குக்குறிகள்.

இங்கிலாண்டுதேசத்தில் வேலைக் காரர்க
ளுக்குக்கிடைக்கும்சம்பளத்தைவிட அய
ர்லாண்டு தேசத்தார் சம்பளம் குறைந்திரு
ப்பதற்கு முக்கியகாரணம், பின்புகூறியதே
சத்தின் ஜனங்களுடைய போஷணத்துக்கு
அதிலிருக்கும் முதல் போதாதாயிருக்குகை
யேயாம். ஆகிலும்சம்பளக்குறைவுக் குமுத
ற் குறைவொன்றே காரணமல்ல. சிலஅரசா
க்ஷிகளின் பழுதினாலுண்டாகத்தக்கசிலகார
ணங்களுமுண்டு. இங்கிலீஷாரைப் போல
அயர்லாண்டுநாட்டார் உழைப்பாளிகளல்ல.
அயர்லாண்டுதேசம் முழுதும் யாத்திரைசெ
ய்த ஆர்தர்யங்கு என்பவர் செப்பியிருக்கி
றதாவது "பயிர் தொழிலுக்குக் கூலி வெ
"குகொஞ்சம் ஆனாலும் நயமல்ல. இங்
"கிலாண்டில் ஒருபாகமாகிய சபக்கென்
"னும் பிரதேசத்தில் தினத்துக்குக் கொடுக்
"கும் இரண்டுஷில்லிங்குஅயர்லாண்டில்மு
"க்கியப்பட்டணமாகிய கார்க்கில் நாளொ
"ன்றுக்கு ஆறுபென்சு கூலியைவிடநயமெ
"ன்றே கொள்ளவேண்டும்" மேலும் வெவ்
வேறு தேயங்களில் வெவ்வேறாக இருப்பது
மன்றி ஒரேதேசத்திலேயே ஒரேசாமானுக்
கு வெவ்வேறு விகாரங்களுமுண்டு. அதற்கு
க்காரணம்அச்சாமான்களிலமைந்திருக்கும்
வேலைத்திறங்களின் தாரதம்மியங்களே. நா
கரீகமுயர்ந்திருக்கும் லண்டன் முதலியபெ
ரும்பட்டணங்களில் மிகவும்சாமார்த்தியமு
ள்ள வேலைக்காரர்களு மிருப்பார்கள். அவ
ர்கள் திறமைக்குத் தக்கபடி பொருள் அளி
ப்போருமுளர். வேலைக்காரர்களுடைய சம்
பாத்தியத்துக்குத் தக்கபடி யவர்களுக்குக்
கூலியைத்தருகிறோம். தட்டான் கெடியார
ம் செய்பவன் இவர்களுக்குத்தையற்காரனு
க்கும் கருமானுக்கும் கொடுக்குங் கூலியை
விட அதிககூலிகொடுக்கிறோமல்லவா? சாம
ர்த்தியம்தேவை யில்லாத விஷயங்களில் உ
ழைப்பு எவ்வளவுகொள்ளுமோ அதின்பே
ரில் கூலி நிஷ்கரிக்கப்படும். மேலும் இதன்
றியும் மிகவும் அபாயம் அல்லது வெறுப்பு
அல்லது அசவுக்கியம் முதலியவற்றை விளை
க்கத்தக்கச்சித்திரமெழுதுதல், லோகங்களை
வெட்டுதல், பீரங்கிமருந்துசெய்தல்முதலி
ய தொழில்களுக்கும்அதிகக்கூலிகொடுக்கப்
படும்.

இதுநிற்க வயித்தியர்களும் லாயர்களும்
தங்களுடைய காலத்தையும் புத்தியையும்ப
ணங் கொடுப்போருடைய வேலைக்குச் செ
லுத்துவதால் அவர்களும் ஒருவித விசேஷ
சாமர்த்தியமுள்ள வேலைக்காரர்களென்று
ம் அதினாலே அவர்களுக்கு அதிகக்கூலிகொ
டுக்கப்பட் டிருக்கிறதென்றும், புத்தியைச்
செலுத்துவோன் சரீரவலிமையைச் செலு
த்துவோனைப் போலவே ஒருவித வேலைக்கா
ரனென்றும், ஆனால்சரீரத்தின்வலிமையைவி
ட புத்தியின்வல்மை விசேஷமானதால் பு
த்தியைச் செலுத்துவோன் கைகால்களினா
லுழைப்பவனைவிட உயர்ந்தவேலைக்காரனெ
ன்றுமாத்திரம் கொள்ளவேண்டுமென்றுஞ்
சிலர் அபிப்பிராயப்படலாம். ஆனால்இதுசரி
யல்ல. அதிகப்படிப்புள்ளலாயருக்கும்விசே
ஷசாமர்த்தியமுள்ள வயித்தியனுக்கும் தே
வையாகிய புத்தியை சீர்படுத்துவதற்கு அ
வர்கள் விசேஷதனவிரயம் செய்திருக்கவே
ண்டுமல்லவா? இவ்வாறு தனவிரயத்தினால்
படிப்பைச்சம்பாதிப்பதேமனிதன் புத்தியி
ல் வைக்கப்பட்டிருக்கும் ஒருவித முதலெ
ன்றெண்ண வேண்டும். அப்படிப்பட்டவர்க
ளுடையவேலைக்குக்கொடுப்பது மேற்கூறிய
மாறாத முதலினால் கிடைக்கத்தக்கலாபமே
யன்றி கூலியல்ல. இவ்வித மாறாதமுதலு
க்கு விவேகமுதல் அல்லது அதிருசியமான
முதலென்று பெயர். இதைப்பற்றி ஸீனியர்
என்பவர்கூறியதையிதனடியில்உரைக்கிறோ
ம். "நாகரீகம் உயர வொவ்வொருமனிதனு
"டைய படிப்பும் அதிகரித்து அவனால் செ
"ய்யத்தக்க வேலையு மதிகமாகுமென்பதில்
"சந்தேகமில்லை. மிருகங்களும் யந்திரங்க
"ளும் சரீரப்பிரயாசையினால் செய்யத்தக்
"கஎல்லாவேலைகளையும்செய்துமுடிக்கும்பு
"த்திவிசேஷத்தினால் செய்யத்தக்கயாவும்
"அப்புத்தியை விரைவில் நற்பயிற்சி செய்
"வதினால் மிகவும்நன்றாய்ச்செய்யப்படும்.
"பிருதானியாதேசத்தின் விவேகம் அல்லது
"நன்னடக்கையாகியமுதல் சாதாரணதிரு
"சியமான முதலைவிடவுத்கிருஷ்டமாயிருப்
"பதுமன்றி விசேஷப்பயனையு மளிக்கும்.
"கேவலம் சம்பளமூலியமாகஜீவனம்செய்
"யுங்குடும்பங்கள் மெத்தஜனசங்கியையில்
"நாலிலொருபாகத்துக்கு குறைந்தேயிருக்

" கும். அதிலு மனேகருடைய சம்பளம்
" மிகப்படித்த விவேகிகளுடைய முதவினு
" லும் சாமர்த்தியத் தினுலும் பெறப்பட்டி
" ருப்பதாகத் தெரியவரும். குத்தகைப்பெ
" ற்றுக்கொள்ளுவோர்களும் வெகுசிலர். அ
" க்குத்தகைப்பணமும் சம்பளங்களைப்போ
" லவே கடவுளால் படைக்கப்பட்ட வஸ்து
" க்களை நன்முயற்சிசெய்து நன்ருய்தட்ட
" யோசித்துக் கொள்வதற்குக்காரணமாகி
" ய கல்வியின்மீதே முக்கியமாய் சார்ந்தி
" ருக்கிறது. இங்கிலாண்டுதேசத்தில் ஜன
" ங்களுடைய வரும்படியின் பெரும்பங்கு
" ம் இலாபமாகவிருக்கிறது. அதில் வெறு
" ம்வட்டியல்லது திருசியமுதலாக விருப்ப
" துமூன்றிலொருபங்குக்குக்குறைவாகவே
" யிருக்கும். மற்றது மனிதசம்பந்தமான
" முதல் அல்லது படிப்பினுலுண்டாகிவரு
" கிறது." இதில் ஸீனியர்என்பவர் நன்ன
டக்கைமுதல், மனிதசம்பந்தமான முதல்
என்று அதிருசியமுதலுக்குப் பேரிட்டிருக்கி
ருர். அதேதெனில் அம்முதலை யார்படை
த்திருக்கிருரே அவனிடத்திலேயே அது அ
மைந்திருப்பதால் மனிதசம்பந்தமான முத
லென்றும் விவேகமுயர்வதினுல் நன்னடக்
கை விருத்தியாவதற்கு இடமுண்டாகுமா
கையால் நன்னடக்கையாகிய முதலென்று
ம் கூறப்பட்டது. ஆகையால் கல்விக்குறை
வே முதற்குறைவாகையாலது ஒருதேசத்தி
ன்விருத்திக்கு பெருந்தடையாயிருக்கும். ஏ
னெனில் பொருளைச்சம்பாதிப்பதற்கு வகை
களைத்தெரிவித்து ஜனங்களுக்கு சக்தியளிப்
பது கல்வியேயல்லவா? மிகச்செழிப்பானபூ
மியும் வெகுஆரோக்கியமானநாடும் வெகுவி
வேகிகளான ஜனங்களும் ஒருமித்திருந்த
போதிலும், கல்வியினு லுண்டாகத்தக்க
தெளிவு இல்லாவிட்டால்அத்தேசம்வறுமை
யான ஸ்திதியிலேயே யிருக்கும். இவ்விஷய
மாக ஐயர்லாண்டு தேசத்தையுதகரித்துவெ
குநன்ருய் மேற்கூறியஸீனியர்என்வபவரெ
ழுதியிருக் கிருர். அதாவது"நிலவளத் தினு
" லாவதுசீதோஷ்ணவிசேஷங்களாலாவது
" அல்லதுஅபரிமிதமானதிருசியசாமக்கிரிக
" ளாலாவது அல்லது விஸ்தாரமான அதி
" ருசியமுதவினுலேயே ஒரு தேசத் திற்
" குச்செல்வ முண்டாகும். ஐயர்லாண்டு
" தேசமானது நிறம் முதலியதுகளில் இ
" ங்கிலாண்டைவிட உயர்ந்ததாகவே யிருக்
" கிறது. அதுகளினுடைய வருமைக்குக்கா
" ரணம் திருசிய முதற்குறைவென்றுகூற
" ப்பட்டிருக்கிறது. ஆனுல் இப்போதத்தே
" சத்திலுள்ள சுவதேச ஜனங்களுக்குப்பதி
" லாகஎழுபதுலக்ஷம் இங்கிலீஷார் அத்தே
" சத்திற்புகுவார்களாகில் அதில்தேவையா
" யிருக்கும் முதல் வெகு சீக்கிரத்தில் சே
" கரிக்கப்படும். இம்மாதிரியாகவே இங்கி
" லாண்டுதேசத்தின் வடபுறத்தி லிருக்கும்
" டிரெண்டென்னுநாட்டில் பத்துலக்ஷம் ஐ
" யர்லண்டுதேசத்தார் புகுவார்களாகில் அ
" து ஐயர்லாண்டைப்போலவே ஆய்விடும்.
" ஆகையால் ஐயர்லண்டின் வருமைக்குக்கா
" ரணம்விவேகம் நன்னடக்கைஇவைகளின்
" குறைவேயாம். இக்குறைவுக்குக்காரண
" ம் கல்விஇன்மை. இக்கல்வி இன்மைக்குடி
" கொண்டு ஜனங்களுடைய மூடத்தன்மை
" யினுலும், குரூரகிருத்தியங்களாலும்,தே
" சத்திற்கும் சொத்திற்கும் பத்திரமின்
" மை நேரிட்டு முதல்சேரவாவது விருத்தி
" யடையவாவது கூடாதிருக்கும் பரியந்தம்
" அவ்வறுமையை போக்கடிக்க இராஜாங்க
" த்தார்செய்யும் முயற்சிகள்சற்றுப்பிரயோ
" ஜனகரமாயிருந்தபோதிலும், அவையிப்
" போதுண்டாயிருக்கும் வியாதியின் குறிக
" ளைக்கொஞ்சம்போக்கடித்தாலும் போக
" கடிக்கலாமேயன்றி மொத்தத்தில் அவ்வி
" யாதியை வளரச்செய்யலாம். ஆகிலும்சா
" சுவதமான பயன் அவையொன்றும் தர
" மாட்டாதென்பது நிஸ்ஸந்தேகம், கல்வி
" யே சக்தியென்று சொல்லப்பட்டிருக்கிற
" து.அதைச் செல்வமென்றேகூறுவது மிக
" வுண்மையாயிருக்கும். ஏஷியாமைனர் ஸி
" ரியா, இஜிப்டு, ஆ்பிரிகாவின்வடபாகம் இ
" வை முற்காலத்தில் செல்வத்திற்சிறந்த
" வைகளாயிருந்து இப்போது எல்லாதேச
" ங்களையும்விடமிகவும் தவுர்பாக்கியஸ்திதி
" யிலிருப்பதற்குக்காரணம் போதுமான அ
" திருசிய முதலைப் படைத்திராத வர்களின்
" வசம்வந்ததேயாம்."

நிருபங்கள்.

ஓம்பரப்ரஹ்மணே நம:.

நீதிலாத்தெய்வமறைமுடிவதனி,
றிகழுறுபழம்பொருடன்னைப்,
பேதமேயின்றியெங்கணுநிறைந்த,
பெருகியகருணைவாரிதியைக்,
கோதிலாத்தியானமார்க்கத்திலறியக்,
குணமிகுஞானநன்னெறியைப்,
போதினியாநிற்குந்தகைபெறுதத்வ,
போதினியென்றுநீவாழி.

இதனடியிற்றீட்டுமென்புன்சொன்மா
லையையுநின்றிருமேனி யின்கட்சுடர்விட்
டிலகுமேனையமணிவடங்களோடுமிகழா

தணிந்ததில் யான்வினையவைகட்குத் தக்
கவிடையுடன் பறந்தோடி வந்தென்மன
மாசையகல் வித்துப்புனிதப் படுத்துவா
யென முழுநம்பிக்கையுடன் காத்திருப்ப
தாலந் நம்பிக்கையைக் கொல்லாதருள்பு
ரிக.

இச்சென்னைமாவிராஜதானிக்குச்சிரோ
பூஷணமாய் விளங்காநின்ற பெரியோரி
ற்சிலர் தங்கண்மனதை வகைமோசமா
யழிவிலங்கிட்ட பொய்ச்சமயமாகிய வி
க்கிரஹாராதனமுதலிய சில பலபரிபவ
ங்களைத்தவிர்த்துத் தங்கள் தேயத்தை
ச்சீர்ப்படுத்துவதே தங்கள்கடமைகளெ
ல்லாவற்றுள்ளு முதன்மையும் பாரமுமா
னதெனவையந்திரிபற வுணர்ந்தவ்வாறு
சித்திபெறுவதற்கின்றியமையாச் சாதன
மாகியும் வெகுசிலர்க்கன்றி பலர்க்கும்
காடாந்தகாரத்திற் கிடக்குமனுபோற்,பு
லப்படாது மிருந்த சதுர்வேதமென்னும்
பார்கடலைத்தங்கள் கோசரபுத்தியென்னு
ந் தரத்தை நாட்டிக்கடைந்து வேதசார
மாகியவமிர்தத்தையெவரும் சுவல்பப்பி
ரயத்தனத்துடன் மாந்தலாலுள தாகுஞ்
சன்மார்க்கத்தை யவலம்பித்துச் சீவிக்க
வேணுமென்கிற தர்மநோக்கதுடனிச்செ
ன்னைமாநகர் செய்ததவமோ ! வென்றுக
ண்டோர் கேட்டோர்வியக்கும்படி,யங்ங
னே வேதசமாஜமெனப்புகழ்பெற்றவோ
ர்திருச்சபையை ஸ்தாபித்துத் தங்ளனும
தங்களைச் சுருக்கியும் விரித்தும் ‘ தத்துவ
போதினி ! யுன்மூலமா யென்போலியப
ல கையொப்பக்காரர்களுக்கும், பொது
வாய் மனிதசாமானியத்துக்கும் தெரிவி
த்துக்கொண்டு வருகின்றனரல்லவா ? அ
வர்கள் தங்கள் கொள்கைகளுக்கு யாரா
வது மாறுபட்டெழுதினும் தத்துவவிசா
ரஞ்செய்யவிருப்பமுள்ள வர்களெதுகே
ட்கினுமவ்வவர்க்குத் தக்கபடி விடையு
ரைப்பதாகமிக்க சீவகாருண்ணியம்பாரா
ட்டிவாக்களித்திருப்பதும்லோகப்பிரசித்
தம். ஆசையாலிப்பொய் மதக்காட்டில
கப்பட்டுவழிதெரியாதுழன்றுதிப்பிரமை
கொண்டிருக்கும் யானென்பொருட்டும்
பிறர்பொருட்டும் முங்ஙனம் வினையவை
கட்கு மன்னுயிரையுந் தன்னுயிரெனக்கி
ரகிக்கும் க்ஷேகனவான்கள் தக்கவிடைத
ந்து சந்தேகந்தெளிவிப்பார்களென மிக
ப்பணிவாய்ப் பிரார்த்திக்கின்றனன்.

க-வது. விக்கிரஹாராதனமென்பது
கொடியபாதகமார்க்கமென்றும், விக்கிர
ஹம்வைத்திருக்கிறகோயில்களில்மாத்தி
ரங் கடவுளிருக்கிறாரென்றுமேனையதல
ங்களிலில்லையென்றல்லவோவாகிறதென்
றும் வாதித்தபோதிலும், பிற்கூறியதைக்
கிஞ்சித்கருத்தாய் விசாரஞ்செய்யவேண்
டியிருக்கிறது; இவ்விடத்திற்குச் சமீப
மாகிய மைலமென்கிற சிவசுப்பிரமணிய
ஸ்தலத்துள், பேய்கோட்பட்டவர்கள் எ
வராவது பிரவேசித்தக்ஷணமே ஐயோ
வந்தகோரத்தை யென்னென்று சொல்
வேன்! அவர்கள், கண்டோர் திடுக்கிட்டு
ப்பயப்பிராந்தி கொள்ளத்தக்கதாக கேச
த்தை விரித்துமனித சுபாவத்துக்கடாத
வும், கோரணியாகவும் விதமா யாடிப்பா
டிக் கூத்தாடி “போகிறேன்போகிறேன்”
என்றபயக்குரலிட்டுக் கத்திக்கதறிப்பித்
தருநாணப் பற்பலவிதமாய்ப் பிதற்றி, யு
டுத்தசீலை நெகிழ்வதுந்தெரியாதவர்களா
ய்க் கடகடவென்று புரண்டலர, வவர்க
ளுக்கபாய நேரிடாது பக்கத்தில் காத்து
நிற்கிறவர்கள் “புத்திவந்ததா இனித்தொ
டராதே, சத்தியஞ்செய்துகொடு” என்று
க்கிரமமாய்க்கேட்க,பேய்கள் (பேய்பிடிப்
பட்டவர்கள்) ஐம்புலன்களுமொடுங்கி ப
க்திவினயத்துடன் “இனி யிவளைத்தோ
டேன், தொடேன்” என்று பலதரமுச்ச
ரித்து கோயில் பலிபீடத்திலடித்துக்கொ
டுக்கவே, திருநீறுகரைத்த ஜலமவர்கள்சி
ரசின்மேற் புரோக்ஷிக்க வாட்டப்பாட்ட
மெல்லாங் கட்டோடேயொழியவிட்டு அ
டியற்ற பனைபோனிலத்தின்மீது மூர்ச்
சையாய் வீழ்கிறார்கள். தெளிந்தவுடன
வர்களையழைத்துக் கொண்டுபோய் நீரா
டிதிருநீறு தூளிதஞ்செய்விக்க வவர்கண்
முன்னிருந்த மானுஷஸ்திதிக்குத் திரும்
பி கிரககிருத்தியங்களில் வழுவுறாது நட
ந்து வருகிறார்கள். மேற்கூறியசங்கதியா
னந்த ஸ்தலத்திற்குப் போகும்போதெல்
லா நிகழவென் கண்ணாரப் பார்க்கிறேன்.
ஒருவேளை யிஃது கோயில் துறையாருக்
குச் சீவனோபாயவழியாயிருக்கலாமென
க்கருதியதை யாதியிலறிய முயன்றேன்,

அப்படியுங்காணோம். துறையாரது வி
ஷயத்திற் றலையிடுவதேயில்லை. பேயை
நெருங்கவுமில்லை. மற்றகோயில்களிலு
ம் சாதாரணமா யெவ்விடங்களிலும்கட
வுள் நிறைந்திருக்க வங்கெல்லாமின்றி யி
க்கோயிலின் மாத்திரம் பேயாடியதற்கு
க் காரணமென்னவாமென்று என்னையடு
த்து நின்றஸ்தானிகரை வினவவவரிது
தான் ஸ்தலமகத்துவமிங்கு துஷ்டநிக்கி
ரகத்திற்கு இதுதான் நிதர்சனமென்றார்.
அதனாலெங்கு நிறைபழம் பொருளாகிய
வெமதப்பனுக் கிங்கதிகமூர்த்தி காமவி
ளங்கியிருக்கிற தாக்குமென்றுமுடிவுசே
ய்து கொண்டுவந்துவிட்டேன். என்றா
லும், இதற்குமுற்றுமாறான வபிப்பிராய
ம் சமாஜத்தாரின் முதல்விண்ணப்பத்தை
ப்பார்ப்பதினாலும், சுவரூபவாராதனையை
ப்பற்றி யப்போதைக்கப்போது தத்துவ
போதினி! நீஏன்றுவந்தன்புடனூட்டும்த
த்துவராசாமிர்தத்தாலும் ஜனிக்கவென்ம
னங்கலுழ்கின்ற தாதலின் நமது சமாஜத்
தார் தக்கபடி காரணஞ்சொல்லி யென்
னைத்தேற்றுதொழிவாராயின் தர்மமாகு
மா ? இவ்வகைத்தான எண்ணரியதிருஷ்
டாந்தங்கள், திருப்பதி, சோளங்கிபுரம்,
எவ்வளூர்முதலிய விஷ்ணுஸ்தலங்களிலு
முள்ளனவாகப்பலர் சொல்லக்கேட்கிறே
ன், காரணமென்னவோவறியேன்.

௨-வது. விஷ்ணுவானவர் தசாவதார
மெடுத்ததாய்ச் சொல்வது மெய்யோ ?
பொய்யோ ? மெய்யென்பதற்குநிதரிசன
மாக வனேக சாஸ்திரங்களிருக்கப் பொ
ய்யென்பதற்குக் காரணமென்னவோ? ப
கவத்கீதை கிருஷ்ணன் அருச்சுனனுக்கு
த்திருவுளம் பற்றியதென்றுச மாஜத்தார்
ஒப்புக் கொண்டிருந்தபக்ஷத்தில் சகலமு
ம்தானென்று தோற்றுவிக்கிற கிருஷ்ண
ன் பரப்பிரம்ம மாகின்றானல்லவா? கிரு
ஷ்ணன் யார்அவதாரமன்றோ? அன்றேவி
து விஷயத்திற் சற்று ஆழ்ந்த விசாரந்
தேவை.

௩-வது ஆழ்வாராதிகளும், நாயன்
மார்களும் வாழ்ந்ததும், ஸ்வரூபாராதன
ஞ் செய்ததும், முத்திபெற்றதும் மெய்
யா பொய்யா?

கடைசியாய் மேற்கண்ட விஷயங்களி
ல் சமாஜத்தார் கொண்டிருக்கு மெண்ண
மிதுவென்று மிந்தவதிகாரத்தின்மேலெ
ன்று மெனக்குப் புலப்படாததினால் யா
ன்விசாரிக்கக் கருதியவிஷய மொன்றாயி
ருக்கப் பலருடைய போதனையாலிதைக்
கேட்டுமுடிக்கலாயின ஞயினுமதை யித
ற்குத்தரங்கிடைத்தபிறகுபிரஸ்தாபியாம
லிருப்பேன். மழலைகேட்டு மகிழும் மா
தாபிதாக்களைப் போல் தயாசமுத்திரமா
கிய வேதசமாஜத் தாரிதனுள் யாதேனு
ஞ் சொற்குற்றம் பொருட்குற்றமுள தே
லவற்றைக்கடித்துக்குணத்தையேற்றுயா
ன் விருப்புற்றதை வெறுப்பின்றி தராதி
ராரென மிகநம்பி யெதிர்பார்த்திருக்கின்
றனன்.

"கைம்மாறுவேண்டாகடப் பாடுமாரிமா
ட்டென்னாற்றுங் கொல்லோவுலகு"

எனத் திருவள்ளுவ நாயனார் திருவா
ய்மலர்ந்த வண்ணம் நாயேன் என்னபிர
தி செய்யப் போகிறேன். வேதசமாஜமு
ம், அதையவலம்பித்தச் சபைகளும், தத்
துவபோதினி நீயும் சர்வாந்தரியாமியா
கிய வவ்வள்ளலைப் போலவே நித்தியமா
ய் வாழ்வதாகவென்று போற்றும்.

திண்டிவனம்
௲௮௬௫ ௵
நவம்பர்௴ -௧௯௨ } தத்துவகாமி

விநோதம்! வெகுவிநோதம்!!!

தத்துவபோதினியின்கர்த்தரவர்கட்கு.

ஐயா.

யான்சிலதினங்களுக்கு முன்மாக்ஷிமை
தங்கிய கவர்னரவர்களின் தோட்டத்திலி
ருக்கிற விருந்துமண்டபத்தில் இங்கிலா
ண்டிலிருந்துச் சென்னைக்குவந்திருக்கிற
புஷெல்என்பவர்செய்த பலவிநோதகாரி
யங்களைக் கண்டுகளித்தேன். யான்கண்ட
வற்றிற் சிலவற்றை யுங்கள் பத்திரிகை
யைவாங்குவோர் படித்து ஆனந்திக் கும்
பொருட்டு அடியில்வரும் சிலவரிகளை எ
ழுதலாயினேன். அவற்றிற்குத் தங்கள்ப

த்திரிகையில் ஓர்மூலையில் சிறிதிடம்தந்த
ருள்வீராக.

அன்று புஷெல்என்பவர்செய்தவினோ
தங்களெல்லாம், எலெக்டிரிஸிடி, மாக்
னெடிஸம், பதார்த்தசாஸ்திரம் ஆகியஇ
ம்மூன்றைப் பற்றியதாயிருக்கின்றன. அ
வற்றுள், எலெக்டிரிஸிடிஎன்பது மின்ன
லிலிருக்கிறஓர் பதார்த்தம்.அவ்வஸ்துசம்
பந்தத்தினால்தான் தந்திமூலமாய் சமாசா
ரங்கள் பிரயோகிக்கப் படுகின்றன. இர
ண்டாவதாகிய மாக்னெடிஸம் காந்தக்க
ல்லிலிருந்து உண்டாகிற ஓர்பதார்த்தம்.

அவர்முதன் முதல்செய்த விந்தையா
வது, அந்தமண்டபத்தின் நடுவில் மரத்
தாற்செய்த ஓர்சிறுகோட்டையைத் தூக்
குவித்து,அதற்குள்ஆறுசிறுபீரங்கிகளைக்
கெடித்துவைத்தார். பிறகு அவர் வேடிக்
கைபார்க்க வந்தவர்களில் பத்து பதினை
ந்து வயதுள்ள ஓர்சிறுவனை வரவழைத்
து, அவனைச்சேனாதிபதியாகப் பாவித்து,
அச்சேனாதிபதியைக் கொண்டு, பீரங்கிக
ள்வெடிக்கக் கட்டளையிடச்செய்தார். சி
றுவன் கட்டளையிடுந்தோறும் அவருக்கு
ம் அக்கோட்டைக்குமிருந்த கண்ணுக்கு
ப் புலப்படாத எலெக்டிரிஸிடியின் சம்ப
ந்தத்தினால் அப்பீரங்கிகள் ஒவ்வொன்று
ய் வெடிதீர்ந்தன. உடனே அக்கோட்
டையிலிருந்து ஜயக்கொடிதானாய் போ
டப்பட்டது.

உ. அவர் ஓர்பெரிய யந்திரத்திலிருந்
த ஓர்கண்ணாடிச் சக்கிரத்தைச் சுற்றுவித்
து அந்த யந்திரத்தின் ஓர்மூலையில் பித்த
ளையால் மூடப்பட்ட ஓர்கண்ணாடிபுட்டி
யைப் பிடித்தார். அப்பொழுது அந்தய
ந்திரத்திலிருந்து மின்னலுண்டாய் புட்டி
யில்பிரவேசித்தது. பிறகு அப்புட்டியை
அங்கிருந்த சிலர் தொடமின்னல் அவர்க
ள்கையை யறைந்தது.

ங. அவர் இரண்டுகம்பிகளை ஒன்று
டன் ஒன்றுசுற்ற அவைகளிரண்டும்எரிந்
து உருகிக்கீழே விழுந்தன. அவர்மற்று
ம் இரண்டுகம்பிகளைச்சுற்ற அவைகள்சூ
ரியப் பிரகாசம்போல் ஜூவலித்து எரிந்
தன. பின்னுமவர் ஓர்கம்பியைக்கொளுத்

தஅது மத்தாப்பு வெளிச்சம் போன்றபி
ரகாசத்துடன் எரிந்தது.

ச. அவர்வேடிக்கைபார்க்கவந்த ஒரு
வரைநிறுத்தி அவர்உடலில் எலெக்டிரி
ஸிடியைப் பிரயோகிக்கவே, எண்ணைதட
விச்சமமாய் வாரிவிட்டிருந்த அவர்தலை
மயிர் நெறித்துக் கொண்டுகூளமாயிற்று.

ரு. சாந்தசம்மந்தமான ஓர்யந்திரத்
தை ஓர்சிறு பெட்டியிலடக்கி, அப்பெட்
டியின் இருபக்கத்திலிருந்தும்கம்பிகளைத்
தொடுத்து, அக்கம்பிகளில் ஒன்றை ஒரு
வர் ஒருகையால் பிடித்தார். அவர் மற்
றொருகையை இன்னுமொருவர் பிடிக்க,
இம்மாதிரியாகவே நாலைந்து பெயர்தொ
டர்ந்துநின்று, கடையில் நின்றவர் அக்க
ம்பிகளில் மற்றொன்றைப்பிடித்தார். பின்
பு புஷெல் என்பவர் அப்பெட்டியின் பி
ன்புறத்திலிருந்த கைப்பிடியைப் பற்றிச்
சுழற்ற அப்பெட்டியிலிருந்த மாக்னெடி
ஸம் அக்கம்பிகளின் மூலமாய், பிடித்தி
ருந்தவர்களின்தேகத்தில் பிரவேசித்து ந
ரம்புகளையிழுக்க அவர்கள் அலறி அக்க
ம்பிகளைக் கைவிட்டார்கள்.

சா. அவர் ஒருகிண்ணம் ஜலத்தில் ஒ
ருவிதபொடியைக்கலந்து கீழேமழைத்து
ளிபோல்விட அத்துளிகள் விழுந்தவிட
மெல்லாம் நெருப்புபோல் பறறி யெரிந்
தது. அவர் மற்றொருகிண்ணம் நீரில்ஒரு
வித பொடியில்ஓர் எள்ளளவு போட அ
துவெடித்து,அதனின்றும் நிலபுருசுபோ
ல் சுவாலைகிளம்பிற்று.

எ. அவர்ஒரு சிறியமேஜையை நடு
வில்வைத்து அம்மேசையை சிலகேள்வி
கள் கேழ்க்க அது டக்டக் என்னு
ம் ஓசையுடன் உண்டென்றும் இல்லையெ
ன்றும் விடை யுரைத்தது. பின்னும்அங்
கிருந்தவர்களில் சிலருடைய கடியாரத்
தைவாங்கி அவைகளில் காலம்என்னவெ
ன்று அவர் அந்தமேசையை வினவஅநு
சரியாய் ஒருநிமிஷங்கூடத் தவறாமல் அ
க்கடியாரங்கள் குறித்தகாலங்களைத் தெரி
வித்தது. அம்மேசை சொல்லுகிறமாதிரி
யாய் அவருக்கிருபக் கத்திலிருந்தும்அவ
ர் கேள்விகளுக்கு விடைவந்தது. அவர்

வேடிக்கையாக அவ்விரண்டு பக்கங்களிலும் பிசாசுகளிருப்பதாயும் அவைகள் உத்தரங் கொடுப்பதாயும் சொன்னார். இவ்வாச்சரியம் எலெக்டிரிஸிடி என்பதனால் நடந்தது.

அ. அவர் ஒரு கோப்பைதண்ணீரை வேடிக்கைபார்க்கவந்தவர்களில் ஒருவனுக்குக்கொடுத்து குடிக்கச்சொன்னார். அவன் அதை ருசிபார்க்க தண்ணீராயிருந்தது. பிறகு அச்சலத்தைக் கொஞ்சங்கொஞ்சம் குடிக்க அது உப்புத்தண்ணியாயும், சோப்புதண்யாயும், பிராந்தியாயும், போர்ட்டுவொயினாயும், தேனாயும் மாறிற்று. கடசியாக அது கைபொருக்கக்கூடாத வென்னீராக அவன் அந்த கோப்பையை கீழேபோட்டுவிட்டான்.

கூ. கடைசியாக அவர்செய்தவிந்தை மேல்வரைந்த வைகளைக்காட்டிலும் மிகவும் சிறந்தது. அதைச் சொல்லவும் முடியாது எழுதவும் எடிடங்கொள்ளாது. அவர்வேடிக்கை பார்க்கவந்தவர்களில் பதின்மரைப் பொறுக்கியெடுத்து அவர்கள் உடலிலும் தன்சரீரத்திலும் எலெக்டிரிஸிடியை ஊட்டுவித்து, அவர்களை ஓர் விசுப்பலகையின்மீது வரிசையாய் உட்காரவைத்தார். பின்பு அவர்களில் ஒருவனுடைய நெற்றியைஅவர்தன்விரலினாற்றொடவே அவ்விரலும் நெற்றியும்ஒட்டிக்கொண்டது. அவ்விதமாக அவனையிழுத்துக் கொண்டு திரிந்தார். பின்பு அவர்விடுஎன்றவுடன் நெற்றிக்கும் விரலுக்கும் இருந்தபற்றற்றது. அதே மாதிரியாய் புஷெல்என்பவருடைய கையும்அவர்களில்ஒருவருடையகையும்ஒட்டிக்கொண்டது. அவர் ஒருவனைநிறுத்தி அவன் காலைத்தொட்டால் அவன்காலை ஒருஅடி பெயர்க்கலாகாது, ஒருவனை நாற்காலியிலிருத்திவிட்டால் அவன் அவ்வண்ணமே இருக்கவேண்டும். அவர் கைகளை யவர்களுக்கு முன்நீட்டிப்பின்னுக்குவாங்கினால்அவர்கள் அவரண்டையில் வராமலிருக்கக் கூடவில்லை; அவர் போனவழியெல்லாம்அவர்கள் போகும்படியாயிருக்கிறது; அவர் ஓடினால் இவர்கள் ஓடுகிறார்கள்; திரும்பினால் திரும்புகிறார்கள். அவர்ஒருவனைநிலத்தில் படுக்கவைத்து அவனுடம்பைத் தடவினமாத்திரத்தில் அவன்சபம் போல்கைகாலாட்டாம லிருந்தான்; பின்பு அவனுடையதலையை ஒருநாற்காலியிலும்குதிகால்களைமற்றொரு நாற்காலியிலும்இருத்தி. அவனிடையில்ஏறிநின்றார்; அவனுடம்பு கொஞ்சமாயினும் வளையவில்லை. அவர்களைத்தன்முன் நிறுத்தித்தான் கூத்தாடினால் அவர்களும் அதேமாதிரியாய்க்கூத்தாடுகிறார்கள், கையையசைத்தால் கூட அசைக்கிறார்கள். அவர்ஒருவனுடையநெற்றியில் கைவைத்தால் அவன்பெயர்கூட அவனுக்குக் கியாபகம்வருகிறதில்லை. அவன் வாயைத் தொட்டால் தெத்திப்பேசுகிறான். அவர்களுக்கு இத்தன்மையான பந்தத்தினால்எட்டுணையும் வருத்தமில்லை. இவ்வாச்சரியத்தைப் பார்த்தாலன்றி திருப்தியாக மாட்டாது. இவையெல்லாம் எலெக்டிரிஸிடியின் சகாயத்தால் செய்யப்பட்டன.

க0. பத்து பன்னிரண்டுபெயர் ஓர்முப்பத்தியாறு முழக்கயிற்றினால் அவர்கையையும் காலையும் உடலையும் வரிந்து கட்டியும்அவர் ஐந்துநிமிஷத்துக்குள் அக்கட்டினின்றும் தன்னை விடுவித்துக்கொண்டாராம். அவர்செய்த விந்தைகளைமுழுதும் எழுதப்புகில் விரியுமாதலால் அவற்றில்முக்கியமாய்த்தோன்றிய சிலவற்றை வரைந்தேன்.

புஷெல் என்பவர் கஷ்டப்படு சாஸ்திரோச்தமாய் அறிந்தவித்தையை இவ்விடத்தில் காண்பித்ததனால் நம்க்குண்டாகிய பயனென்னவெனில், நம்மவரில் பலருககு மந்திரத்திலிருக்கிற மூடநம்பிக்கையற்றுப்போமென்பதுதான். நம்மதேசத்தில் சிலருக்கு, புஷெல்என்பர் செய்ததைப்போல் சிலவிந்தைகள் செய்ய சக்தியிருந்தபோதிலும் அவர்கள், அவ்வித்தை தங்களுக்கு மந்திரபலத்தாலும், குட்டிச்சாத்தான், எக்ஷிணி வசியத்தாலும், கைக்கூடியதென்று பெரும்புளுகுசொல்லுகிறார்கள். இனியாவது அவர்களிடத்தில் நம்மவருக்கு இருக்கிற மூடபக்தியும், நம்பிக்கையும் அற்றுப்போமென்று கோருகிறேன்.

கடைசியாகத், தத்துவபோதினிமுதலாகிய வேதசமாஜத்தாருடையபுத்தகங்களைப்படிப்பதினல் மானிடத்தன்மைக் கடுக்காத அர்ச்சையினிடத்தில் பற்றற்று, மந்திரம் குட்டிச்சாத்தான்களிடத்தில் நம்பிக்கையற்று, நம்மதேசம் விருத்தியடையுமென்று, ஞானனந்தசுவரூபியாகியப்பரப்பிரும்மத்தை இடைவிடாதுப்பிரார்த்திக்கிறேன்.

இப்படிக்கு,

ஓர்மைலேவாசி.

பிரும்மகுணவினுவிடை.

நேரிசைவெண்பா

சிவர்முகத்தழகின் சீர்காட்டுந் தர்பணம் போல்
சிவர்மனவறிவின் சீர்காட்டுஞ் -சீவரத்நத்
தத்துவபோதினிமோற் சாந்தகுண மானேநீ
இத்தரத்திலுண்டோஷியம்பு.

வினு. பிரும்மத்தின் குணங்களென்ன?

விடை. பிரும்மத்தின குணங்களைந்தாகும்.

வினு. அவைகளின் விவரமென்ன?

விடை. சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம், திரோற்பவம், அனுக்கிரகமென்பனவாம்.

வினு. சிருஷ்டி என்னுங் குணத்தாலென்னசெய்கிறது?

விடை. சிருஷ்டிஎன்னுங் குணத்தால் பிரதிவியாகமண்ணுகவிருந்து ஜீவர்களுக்கு உடலுண்டாக்குகின்றது.

வினு. ஸ்திதி, என்னுங்குணத்தாலென்னசெய்கிறது?

விடை. ஸ்திதி, என்னுங்குணத்தால் அப்பாகஜலமாக விருந்து ஜீவர்களுக்கு உணவுமுதலானவைகளையளிக்கின்றது.

வினு. சங்காரம்என்னுங் குணத்தாலென்னசெய்கிறது?

விடை. சங்கார மென்னுங் குணத்தால்தேயுவாக நெருப்பாகவிருந்து சீவர்களுடலை யழிக்கின்றது.

வினு. திரோற்பவமென்னுங்குணத்தாலென்னசெய்கிறது?

விடை. திரோற்பவமென்னுங் குணத்தால் வாயுவாக காற்றுகவிருந்துசீவர்களுக்கு நல்வினை, தீவினை சம்பந்தமல்லாமல், பரிஷ்கரிக்கின்றது.

வினு. அனுக்கிரகமென்னுங் குணத்தாலென்னசெய்கிறது?

விடை. அனுக்கிரகமென்னுங் குணத்தால்வெளியாகஆகாயமாகவிருந்துசீவர்கள்இன்புற்றிருக்கும் படித்தன்சமுகமளிக்கின்றது.

வினு. இப்பேர்பட்ட குணங்களை உலகத்தோரெப்படி யனுசரிக்குருர்கள்?

விடை. ஞானவான்களின் நூலாராய்ச்சியும், சாதுசங்கப்பழக்கமுள்ளவர்கள் மாத்திரம், இக்குணங்களெல்லாம் ஒப்பற்றப்பிரம்மத்தினதென்றுணர்ந்து அப்பிரும்மத்தையேஅனுசரிக்கிருர்கள். மற்றவர்கள் இவ்வழி தெரிந்துகொள்ளாமல்வெவ்வேறுதெய்வங்களாகஎண்ணி, நடக்கிருர்கள்.

வினு. அவர்கள் பிரும்மத்தின் முதற்குணத்தை என்னவென்று நினைத்து நடக்கிருர்கள்?

விடை. அப்பிரும்மத்தின் முதற்குணமாகிய சிருஷ்டிக்குக்காரியமாகிய மண்ணுக்கு, பிரம்மா, வென்கிற பேரிருக்கிறபடியால் அதுவே சிரேஷ்டமென் றெண்ணி வணங்குவதுடன், மற்றவர்களுடன் வாதஞ்செய்கிருர்கள்.

வினா. அப்பகவான், இரண்டாங் குணத்தை என்னநினைக்கிறார்கள்?

விடை. அப்பகவான் இரண்டாங்குணமாகிய,ஸ்திதிக்குக்காரியமாகிய ஜலத்துக்கு விஷ்ணுவென்கிற பெயரிருக்கிறபடியால்அதுவேசிரேஷ்டமெனறெண்ணி - வணங்குவதுடன் மற்றவர்களுடன் வாதஞ்செய்வதுமன்றி, வடகலைதெங்கலைஎன்கிற, மருள்பிடித்துத்திருகிறார்கள்.

வினா. அக்கடவுளின் மூன்றாங்குணத்தை என்னநினைக்கிறார்கள்?

விடை. அக்கடவுளின், மூன்றாங்குணமாகிய நெருப்புக்குசிவனென்கிற பெயரிருக்கின்றபடியால் அதுவே சிரேஷ்டமென்றெண்ணி வணங்குவதுடன் மற்றவர்களுடன்வாதஞ்செய்வதுமன்றி, சைவம், வீரசைவமென்கிற பித்தம் பிடித்துத் திரிகிறார்கள்.

வினா. அப்பரத்தின் நான்காம் குணத்தை என்னநினைக்கிறார்கள்?

விடை. அப்பரத்தின் நான்காம் குணமாகிய திரோற்ப வத்துக்குக் காரியமாகிய காற்றுக்கு மகோவரனென்கிற பேரிருக்கிறபடியால், அதை வணங்குவதுமில்லை வாதாடுவதுமில்லை.

வினா. அப்பிரும் மத்தின் ஐந்தாகுணத்தை என்னநினைக்கிறார்கள்?

விடை. அப்பிரும்மத்தின் ஐந்தாங்குணமாகிய அனுக்கிரகத்துக்குக்காரியமாகிய வெளிக்கு, சதாசிவமென்கிறபெயரிருக் கிறபடியால்அதையும்வணங்குவதுமில்லை, மல்லையுத்தஞ்செய்வதுமில்லை.

வினா. மண்-ஜலம்-நெருப்பு- இவைகளை வணங்கி-மற்றகாற்றையும்-வெளியையும்-ஏன்வணங்காமலிருக்கிறார்கள்?

விடை. முதற்சொன்ன மூன்றினுருவங்களும், கண்களுக்குத்தெரிகிறபடியால் அவைகளுக்கு ரூபங்களேற்படுத்திவணங்கியும்,பின்சொல்லும்-கண்களுத்தெரியாதபடியால்-அவர்களுக்கு ரூபங்களேற்படுத்தாமலும், வணங்காமலும்விட்டார்கள்.

வினா. சிலர், கோபிமண்ணை நெற்றிமுதலியவிடங்களிலணியவேண்டியதென்ன?

விடை. அவர்கள் முதற்குணமாகிய மண்ணைத்தெய்வமாகத் தொழுபவர்களாகையால் அதற் கடையாளமாக அப்பூமியி லுண்டாகுங் கோபிமண்ணை அணிந்துகொள்ளுகிறார்கள்.

வினா. சிலர்-வெள்ளைநாமத்தை நெற்றிமுதலான விடங்களி லணிந்துக்கொள்ளவேண்டியதென்ன?

விடை. அவாகள் இரண்டாங்குணமாகிய ஜலத்தைத் தெய்வமாகத் தொழுபவர்களானதால் அதற்கடையாளமாக ஜலத்தின், நுரையையணிந்துகொள்ளுகிறார்கள்.

வினா. சிலர் விபூதியை நெற்றிமுதலியவிடங்களி லணியவேண்டிய காரணமென்ன?

விடை. அவர்கள் மூன்றாங்குணமாகிய, அக்கினியைத்தொழுபவர்களாகையால்அதற்கடையாளமாகச்சாம்பலை யணிந்து கொள்ளுகிறார்கள்.

வினா. இப்படிக்கிருந்தால் இவர்கள் தேறுவதெப்படி?

விடை. இவர்களிப்படிக்கிருக்கிற வரையில், யானையைத்தடவிப்பார்த்தகுருடர்கள் கதையேயாம்.

வினா. எப்படிக்கிருந்தால் கடைத்தேறலாம்?

விடை. சான்றோர்களுடைய நூலா

ராச்சியாலும், சாதுசங்கப் பழக்கத்தாலும், சன்மார்க்கம் விளங்கி, மேற்சொல்லியஐந்துகுணங்களும் ஒரு பிரும்மத்தினதென்றுணர்ந்துகொண்டு நல்வழியில் நடப்போமாகில் சச்சிதானந்தமாயிருக்கும் அப்பிரும்மத்தின் அருள்பெறலாமென்பதற் காட்சேபமில்லை.

நேரிசைவெண்பா.

வேதசமாஜத்தில் விளங்கும்தத்துவபோதினியே,
நாதபிரும்மகுண நாலுமொன்றும்-பேதமாய்,
சிவர்சொண்டாடுவது சிர்தருமோஅக்குணங்க
டேவனொருவ னன்றேசெப்பு.

முன்னோர்வெண்பா.

பிர்மமுட்டும் பேசுவாயுங்கண்ணும்
மர்மமுயிர்ப்புமனமுமே-நிர்மலமாய்,
திண்ணமாமென்றறிவோர் சிராகக்கோனவரே,
மண்ணீர்திவாயுவெளி.

தூஅகூடு௵ நவம்பர்மீ ௰௫உ பெங்குளூர். | இங்ஙனம் அறிவோர்க்கன்பன் ஆ. ஐயாசாமிமுதலியார்.

விளம்பரம்.

ஸ்ரீராமாயணத்தில் சில சில சுலோகங்களில் பதந்தோரும் -ய - அ - விதமானவிசேஷ ரஹசியார்த்தங்களைக்காண்பித்து, சுருதி ஸ்மிருதி இதிஹாஸங்களையும், ஆழ்வார் அருள்ச்செயலான பாசுரங்களையும், உதகரித்து செய்திருந்த தநிசுலோகி என்கிற மணிப்பிரவாள வியாக்கியானமானது, தி - குனுக்கரம்பாக்கம் வித்துவான் கோபாலாசாரியரால் தமிழிலும், கிரந்தத்திலும் மணிப்பிரவாளமாய் அச்சிட்டிருக்கிறது. அந்த புஸ்தகம் - க இ - ரூ கஉ. தெலுங்குலிபியில் அச்சுபுஸ்தகம் - க- இ - ரூ க. தபால்கூலி - அரு உ; இந்த புஸ்தகம் விலையில்லாத மாணிக்கத்தோடே ஒப்புச்சொல்லலாயிருக்கும். இந்தவிலை கடுதாசுகிரயமும், அச்சுக்கூலியும், சேர்ந்த தொகையென்று அறியவும். இது வேண்டியவர்கள் மைலாப்பூரில் தத்துவபோதினிஅச்சுக்கூடத்திலும், திருவல்லிக்கேணி மேலண்டை வீதியில்உ௰அ - வது கதவிலக்கமுடைய கிரஹத்தி லிருக்கும் மேற்சொல்லிய கோபாலாசாரியரிடத்திலும், எழுதிக்கொள்ளவும்.

தனியான, ஒப்பற்ற, மெய்யறிவநந்த பிரும்மம், சாந்திபூர்ணம், அமிருதம், அதுஉருவும்குற்றமுமற்றது. இதையறிந்தவர்அமிருதராவார்; மற்றவர்துக்கமேயடைவார்

மெய்யேவெல்லும், பொய்யல்ல.

சென்னப்பட்டணம்,—தத்துவபோதினி அச்சுக்கூடத்தில், கா. தெய்வசிகாமணி முதலியாரால் பதிப்பிக்கப்பட்டது.